# ஆத்ம ஜோதி



# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும்
இறைவன் ஒருவன்
எல்லா உடலும்
இறைவன் ஆலயமே.
...சுத்தானந்தர்...

சோதி 10 சுடர் 11
விளம்பி௵ புரட்டாசி 17-9-58

## பொருளடக்கம்

மீனாட்சிஅம்மைபிள்ளைத்தமிழ் 321
பேரின்பத் தெள்ளமுது ...322
தாயன்பு ...323
யோக ஆசனங்கள் ...325
அன்னையும் பிதாவும் ...331
சற்குருக்கண்மணி ...337
ஆண்டவனின் அரண்மனை ...339
ஸ்ரீலலிதா பஞ்சரத்தினம் ...342
அன்பு ...345
நான் போனால் போகலாம் ...348
ஸ்ரீ சிவானந்த சரசுவதி ...351

## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75-00
வருடசந்தா ரூ. 3-00
தனிப்பிரதி சதம் -30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்: நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி - (இலங்கை)

## வாய்வு சூரணம்.

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு இடுப்புவாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், கைகால் அசதி, பிடிப்பு, பசியின்மை, வயிற்றுவலி, பித்தசூலை, பித்தமயக்கம், புளியேப்பம், நெஞ்சுக்கரிப்பு, முதலிய வாய்வுரோகங்களை நீக்கி ஜீரணசக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

### உபயோகிக்கும் முறை.

இந்தச்சூரணத்தில் ½ தோலா அளவு எடுத்து அத்துடன் ½ தோலா சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீரும் அருந்தவும். காலை, மாலை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக் கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம்- நெய், பால் வெண்ணெய் நிறையச் சாப்பிடலாம் வாரம் ஒருமுறை எண்ணெய்ஸ்நானம் செய்யலாம். மூலிகையினால் தயாரிக்கப்பெற்றது.

(பத்தியமில்லை)

தபாற் செலவு உட்படடின்
3 ரூபா 75 சதம்
சம்பு இண்டஸ்ரீஸ்,
சேலம் எஸ். ஐ.
மலாயாவிற்கு
ஏஜண்டுகள் தேவை
இலங்கையில் கிடைக்குமிடம்:
ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி (இலங்கை)

## மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்

(குமரகுருபரசுவாமிகள்)

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தொடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக வருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

# பேரின்பத் தெள்ளமுது

(மகரிஷி சுத்தானந்தர்)

7. அன்பே யுனக்குவமை, அன்பே யுனக்குருவம்
அன்பே யுனக்கா லயம்,
அன்பே யுனக்கு மலர், அன்பே நிவேத்தியமும்
அன்புவழி பாடு னக்கே
அன்பே யுனக்காகும் ஆசார நியமமுள்
அன்பே எனக் கறநெறி
அன்பே யெனக்கு மதம் அன்பேயெனக்குச்சுகம்
அன்பே எனக்கு முக்தி (யிருன்
அன்பே யெனக்குடலம், அன்பே யெனக்கு-
அன்பே யெனக் குலகெலாம்
அன்பே யெனக்கு வரம், அன்பே யருந்தவமுன்
அன்பே யனந்த பதவி
அன்பழகு பொங்கிநிறை யன்பலை புரண்டோடும்
அன்புமய மான பொருளே!
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

8. எப்போது முன்பூஜை, எப்போது முன் எண்ணம்
எப்போது முன்ற னுறவே!
எப்போது முன்சக்தி, எப்போது முன்முக்தி
எப்போதும் உன்சித்தியே!
எப்போது முன்சுத்த மெப்போது முன்சத்ய
மெப்போது முன்சமரசம்
எப்போது முன்யோக மெப்போது முன்போகம்
எப்போது முன்தாகமே!
எப்போது முன்சச்சி தானந்த மயமாகி
என்றென்று முன்ற னுடனே
ஏகாந்த நித்திய சுகாதீத நிஷ்டைபெறும்
இன்பப் பசிக் கமுதமே!
அப்பனே யுனையன்றி யெனையாவரறிகுவார்
அனந்த ஞானப் புனிதனே!
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

---

# தாயன்பு

(ஆசிரியர்)

இறைவன் கருணையே உருவானவன். சில்வாழ் நாள் பல்பிணிச்சிற்றறிவினராகிய மக்களால் இதனை உணரமுடிவதில்லை. இறைவனது அன்பிற்கு அடுத்தபடியாக உள்ளது தாயன்பு. தாயன்பைச் சிலசமயங்களில் வாழ்க்கையில் உணரமுடிகிறது. நம்மை ஈன்றெடுத்த தாயின்மேல் செலுத்தும் அன்பையே ஆண்டவன்மீது திருப்பிவிடும்போது ஆண்டவனிடம் நீங்காத ஒரு பிரேமை உண்டாகின்றது.

ஸ்ரீ இராமகிருஷ்ணபரமகம்ச தேவர் காளிதேவியை அன்னை அன்னை என்று அன்புசெய்தே அருள் பெற்றார். இறைவன் வேறு அருள் வேறு அல்ல. நெருப்பும் சூடும் போல, மணியும் ஒளியும் போல, மலரும் மணமும்போல பிரிக்கமுடியாதவை. பொருள் ஒன்றாயினும் அவற்றை விளக்குவதற்காக இரு சொற்கள் இடம் பெறுகின்றன. இறைவனைத் தந்தை என்றும் திருவருளைத் தாய் என்றும் பெரியோர் போற்றினர். தாயே தந்தையை அறிவிப்பவள்; தந்தையிடத்து அழைத்துச் செல்லுபவள். அதேபோன்று திருவருள் முன்னின்று உணர்த்தினாலன்றி நாம்இறைவனை உணர முடியாது. இதனைக்குறித்தே

''அவனருளாலே அவன்தாள் வணங்கி''
''அவனருளாலே கண்ணாகக் கொண்டுகாட்டி-
னல்லால்''

என்ற பெரியார் வாக்குகள் எழுந்தன.

பட்டினத்தார் துறவியான பின்பும் தாயிடத்து அன்பு கொண்டு வாழ்ந்தவர். தாய் செய்த நன்றியைத் துறவிகளாலும் மறக்க முடிவதில்லை. இறைவன் நினைப்பினால் எல்லாவற்றையும் துறந்த பட்டினத்தாருக்குத் தாயன்பு மாத்திரம் துறக்கமுடியாதிருந்தது. அவரே இறைவனையடையும் மார்க்கத்தைப் பற்றிக் கூறும் இடத்து,

"மெய்யருளாந் தாயுடன் சென்றுபின்-
தாதையைக்கூடிப்
பின் தாயை மறந்தேயுமதே நிட்டை"

என்கின்றார். அதாவது: உண்மையாகிய சிவசக்தியாகும் தாயைப் பின்பற்றி, பிறகு தந்தையாகிய இறைவனையணைந்து தான் தந்தையை அணைதற்குப் பற்றுக்கோடாகிய தாயை மறந்து, பொருந்தியிருக்கும் அத்தன்மையே நிட்டை, என்கின்றார். ஆன்மாக்கள் தாம் பூமியில் பிறக்குந்தோறும் ஜனன வலைப்பட்டு அழுந்தாவாறு (தாய் பிள்ளையின் மாட்டு மிக்ககவலையுடனிருந்து அப்பிள்ளைக்குத் தீமை நேரிடாவாறு காத்தல்போல்) காத்தலின் இறைவியை, 'மெய்யருளாந் தாயுடன் சென்று' என்று கூறினார். இங்ஙனம் சத்திநிபாதம் அடைந்தவன் சிவத்துடன் கூடிப் பேரின்பமாகிய முத்தியினை அனுபவிப்பான் என்பார், தந்தையைக் கூடி என்றார்.

மணிவாசக சுவாமிகள் திருவாசகத்தில்

"நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற்சிறந்த தயாவானதத்துவனே" என்றும்
"பால்நினைந்தூட்டும் தாயினும்சாலப்பரிந்து"
என்றும்

அருளிச் செய்துள்ளார். இறைவனது அன்பைத் தாயின் அன்பிற்கு மேலாக அருளிச் செய்கின்றார்.

நாம் எங்காவது வெளியூர் சென்று திரும்பினால் தாயார்தான் மகன் எவ்வாறு உடம்பு சௌக்கியமாக வந்திருக்கின்றானா? மெலிந்து போயிருக்கின்றானா என்று பார்ப்பாள். தன்னுடைய மகன் நல்ல சௌக்கியமாக வந்திருந்தாலும் எனது பிள்ளை நன்கு உடல் இளைத்துப்போய் வந்திருக்கிறானே என்றுதான் பிறரறியக் கூறுவாள். இவையெல்லாம் அன்பின்விளைவே. மனைவியோ மக்களோ என்ன தேடிக்கொணர்ந்திருப்பார் என்று பொருளில் அல்லது பணத்தில் கண்ணோட்டமாக இருப்பர். ஆகவேதான் தாயின் அன்பு கூடுதலாகக்கூறப்பட்டது.



ஒருதாய்க்கு ஒரே ஒரு மகன். அவனும் பெரியவனாகி அவனுக்கும் ஒரு குழந்தை. கடும் புயற்காற்றினால் வீட்டுக் கூரை சீர்குலைந்திருந்தது. அதைச் சீர்படுத்தக் கூரைமீது ஏறி நின்றான் மகன். நேரமோ உச்சிவெயில். கிழவியால்சகிக்கமுடியவில்லை. மகனே இறங்கு. வெயில் தணிந்தபின் வேலைபார்க்கலாம் என்றாள். இதோ வேலை முடிந்துவிட்டது. கெதியில் இறங்கி விடுகின்றேன் என்று கூறிக்கொண்டே வேலையில் கண்ணுங் கருத்துமாயிருந்தான் மகன். கிழவிக்கு இருக்கமுடியவில்லை. அடிக்கடி வந்து கூறிக்கொண்டே இருந்தாள். அது தாயின் பாசம். கிழவியின் தொணதொணப்பை மகனால் பொறுக்க முடியவில்லை. அம்மா போய் வீட்டுக்குள் பேசாமல் இரு; நான் வேலை முடிந்துதான் இறங்குவேன் என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டான் மகன்.

கிழவி மகன் வார்த்தையைக்கேட்டு உள்ளேசென்றாள். அவளால் இருக்க முடியவில்லை. வெயில் எல்லாம் தன்தலையிலே காய்வதுபோல் அநுபவித்தாள். அதற்கிடையிலே கிழவியின்மூளை பலமாகவேலைசெய்தது. தொட்டிலில் நித்திரையாக இருந்த குழந்தை விழித்து விட்டது. அக்குழந்தையைத் தூக்கிச் சென்று முற்றத்தில் கிடத்திவிட்டாள் கிழவி. இச் செய்கையைக் கவனித்தான் மகன். உனக்கென்ன பயித்தியமா? பச்சைப்பாலனை வெயிலில் கிடத்துகின்றாயே என்று குதித்தோடி வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டுள் புகுந்தான் மகன். கிழவி அப்பாடி என்று பெருமூச்சு விட்டாள். உனக்கு உன்குழந்தை எப்படிக் குழந்தையோ! அதுபோல எனக்கு நீ எப்போதும் குழந்தைதானே! என்றுகூறினாள் கிழவி.

அறுபது வயது சென்றபின்பும் தாய் ஒருத்திதானே அவரைக் குழந்தை என்று கூப்பிடுகின்றாள். அந்தநேரத்திலே அறுபது வயது கிழவனார் பதினாறு வயதுக் குமரனாகிவிடுகின்றார். தங்களது வாழ்க்கையில் நீண்டகாலம் தனது தாயை வழிபாடு செய்து வணங்கி அவளின் ஆசியைப் பெற்று வாழக்-

(230 ஆம் பக்கம் பார்க்க)


(எஸ். ஏ. பி. சிவலிங்கம்)

## 61. சிரசாசனம்

(பழகும்விதம்)

சுத்தமான, சமதளத்தின்மேல் மிகவும் கெட்டியான விரிப்பில் அல்லது விரிப்பை நான்காக மடித்துப்போட்டு மண்டியிட்டு உட்காரவும். அதாவது முழங்காலில் உட்காரவும்.

கைகள் இரண்டையும் கோர்த்து உள்ளங்கை எதிர்ப்புறம் பார்த்தவண்ணம் விரிப்பின்மேல் வைத்துத் தலையை முன்குனிந்து கையையொட்டியவாறு வைக்கவும். பின் கால்களில் நிற்கவும். அதாவது முழங்காலை உயரத் தூக்கி மெதுவாய்க் கால்களை நிலத்தைவிட்டு மேல் தூக்கவும். கால்கள் ஒன்றுடனொன்று சேர்ந்தேயிருக்கவேண்டும். பின் தொடையுடன் மடித்துத் தூக்கி, சிறிது சிறிதாக நேராய் மேல் தூக்கி நிற்கவும். கால்கள் இரண்டும் வளையாமல் நேராய் நிற்கவும். முழங்கைகள் நன்கு கீழே பதிந்திருக்கவேண்டும். இப்போது, கைகள், தலை இவைகளின் வலுவால் தலை கீழேயும், கால் மேலுமாகநிற்கின்றது. சித்திரம் 61 பார்க்கவும்.



இந்நிலையில் ஆரம்பத்தில் நிமிடங்களாகச் செய்து 5-நிமிடங்களும், பின் சிறிது பழக்கமானவுடன் பதினைந்து நிமிடங்களும், வாரத்தில்



இருப்து நிமிடங்களாகவும் செய்து நாளடைவில் அரைமணிக்குமேல் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் செய்யப்பழகவும்.

ஆரம்ப சாதகர்கள் சற்று கவனிக்கவேண்டுவன: இவ்வாறு செய்ய இயலாவிடில் சுவரின்மூலையில் வஸ்த்திரத்தை நான்காகமடித்துப்போட்டு சுவரின் மூலையின் உதவியால் செய்யவும். இதுவும் செய்ய இயலாவிடில்;

ஓர் நண்பரின் உதவியால் செய்யவும்; ஆதாவது விரிப்பின்மேல் கைகளைவைத்து தலையையும் வைத்து சிறிது கால்களை மேல் தூக்கியவுடன் நண்பரை கால்களைப் பிடித்துக்கொள்ளச் செய்து சிறிது நேரம் இருந்தபின் ஆசனத்தைக் கழற்றிச் செய்யவும். இவ்வாறு ஆரம்ப சாதகர்கள் இம்முறையில் செய்தால் சிரமமிரா!

காலையிலும், மாலையிலும் அடிக்கடி செய்வதால் பழக்கமும், நீண்டநேரம் நிற்கக்கூடிய தன்மையுமுண்டாகும்!

அதிகநேரம் இந்த ஆசன நிலையில் இருந்தால் ஆசனத்தைக் கலைத்தபின் உடம்பை முழுவதும் கைகளால் தடவவும் இரத்தம்முழுவதும் தலைப்பாகத்துக்கு வந்திருப்பதால் தடவினால் இரத்த ஓட்டம் அங்கங்களுக்குப் போய் உஷ்ணத்தையுண்டுபண்ணும்.

### கலைக்கும் விதம்:-

தலை கீழும், கால் மேலும் நேராய் இருக்கக்கூடிய நிலையில் கால்களை சேர்ந்தாற்போல் சிறிது முழங்காலுடன் மடக்கி பின் கால்களை தரையில் கொண்டு வந்து ஊன்றி, மடித்து முழங்காலை கீழேயூன்றி, ஆசனத்து அதைக்கலைக்கவும்; மேல் தூக்கும்போதும் கீழே வைக்கும்போதும், அவசரமின்றிச் செய்யவும். கண்கள் மூடியே இருக்கவும், சுவாசம் சமநிலையிலிருக்கவும்.

தும்மல், தீய எண்ணங்கள், கொட்டாவி, பேச்சு அங்கங்களை அசைத்தல் முதலிய பல செய்கைகளை இந்த ஆசனத்திலிருக்கும் போது செய்யக்கூடாது.

பல மாதங்களில் அரைமணிநேரம்நிற்கக்கூடிய அளவில் கண்களை மேலும், கீழுமாகவும், குறுக்கு, வட்டமாகவும் சுழற்றினால் கண்களுக்கும், கண்களின் உள்பாகத்துக்கும் நல்ல பலனையும், தூரப் பார்வையையும், மிகவும் கூர்மையானதாக்கும்.

ஆண், பெண் அனைவரும் செய்யலாம். பெண் மணிகள், மாதவிடாய், கெர்ப்பகாலம், ருது முதலிய முக்கிய காலங்கள் தவிர மற்ற நாட்களில் செய்து பலனடையலாம்.

## பலன்கள்:

சிறு மூளை, பெருமூளை, கழுத்து, ஈரல், இதயம் கைகள் இவைகளை வலுவேற்றி, நல்ல ஞாபகசத்தியும் உண்டாக்குகின்றது. தலைவலி, மூக்கில் சளி பிடித்தல் முதலிய ஐம்புலன்களின் வியாதிகளைக் குணப்படுத்தும். ஓர்சிலருக்கு சிற்றின்ப சேர்க்கை அதிகத்தால் ஏற்படும் பல வியாதிகளையும், கவலைகளையும், தோல்சுருக்கங்களையும்குணமாக்கும். வயிற்று வலியை குணப்படுத்தும், அஜீரணத்தைப்போக்கி ஜீரணசக்தியை அதிகரித்து, முகப் பொலிவையும் கொடுத்து காது செவிடையும் தவிர்க்கும்.

பிரஹ்மசர்யத்தை காக்க வைக்கின்றது. ஊர்த்வ ரேஜஸ் உண்டாகின்றது. ஆத்ம ஞானத்தில் பற்றுதலுள்ள சாதகர்களுக்கு ஓஜஸ் விந்துவால் சக்தியாக மாறுகின்றது. யோகிகள் மிகவும் விருப்பப்படுகின்றனர்.

சுக்ஷும்ண நாடிகளுக்கு நல்ல வலுவேற்படச்செய்கின்றது. "எறும்புக்கும் தன்கையால் எண் சாண்"



எனும் மொழியைப்போல் "எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்றதைப்போல் தலையினுள்ளடங்கிய பாகங்கள் யாவுக்கும் நல்ல பலனை யளிக்கின்றது.

## குறிப்பு:

ஐம்புலன்களில் ஏதாவதொன்றில் வியாதி ஏற்பட்டால் கண்டிப்பாய் இந்த ஆசனம் செய்யக்கூடாது. குணமாயின பின் செய்யவும்.

---

### : ஐயம் தெளிதல் :

பல அன்பர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆத்மஜோதியில் இப்பகுதியை ஆரம்பித்திருக்கின்றோம். ஆத்மீக உண்மைகளை அறியவிரும்புவோரும்சாதனையாளர்களும் தத்தமக் கேற்படும் ஐயங்களை எழுதி அனுப்பினால் இயன்றவரை விடை அளிக்கப் பெறும். ஐய வினாக்களுக்கு விடை அளிப்பதற்குச் சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் இசைந்துள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**ஆத்மஜோதி நிலயம்**
**நாவலப்பிட்டி.**

(325 ஆம்பக்கம் தாயன்பு தொடர்ச்சி

கொடுத்து வைத்தவர்கள் சிலபேர்தான் இருப்பார்கள். சிலபேர் தாயை வைத்திருந்தாலும் "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்ற வாக்கை மறந்துவாழ்கின்றார்கள்.

இத்தகைய தாயன்பே இறைவனிடம் செலுத்தப்படுகின்றது. அப்போ அவன் தாயாகிவந்தே அருள் செய்வான். தாயிழந்த பன்றிக்குட்டிகளுக்குத் தாயாகி வந்து பால் கொடுத்தார் சிவபெருமான். செட்டிச்சியம்மையின் மகளுக்குத் தாயாகிவந்து மருத்துவவேலை பார்த்தார். இதனாலன்றோ எம்பிரானுருக்குத் தாயுமான சுவாமி என்றும் பெயருண்டு.

"அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்" என்பது யாவரும் அறிந்த மேன்மொழியாகும். குழந்தைபோல் விளங்கும் குருநாதனை "அழுந்தொறும் அணைக்கும் அன்னை" என்று பாராட்டியுள்ளார்கள். உலகோரெல்லாம் உடல்தாயின் வயிற்றை நாடிச் செல்ல அறிவோரெல்லாம் ஞானத்தாயின் அடியைத் தேடிச் சென்றுள்ளார்கள். தாயின் பாதார விந்தத்தின் பெருமையைத் தாயுமானர் கூறுகின்றார். ஒருவன் தாயின் அடியில் தன் கருத்தை வைத்துவிட்டால் அவன் அடையும் சுகத்தை விவரிக்கின்றார்.

"பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள் பக்கமுண்டு
எக்காலமும் பவுசுண்டு தவசுண்டு
திருஷ்டாந்தமாகவே யெமபடர் எனுய்திமிரம் அணுகாத
கதியுண்டு ஞானமாம் கதிருண்டு
சதிருண்டு காயசித்திகளுமுண்டு கரையுண்ட கண்டர்பால்
அம்மை ன்தாளில் கருத்தொன்று உண்டாகுமேல்"

தாயின் தத்துவம் உலக ஜீவராசிகள் முழுவதிலும் அன்பாகப் பரந்து ஊடுருவி நிற்கின்றது. அவளைக்காணும்பார்வை ஒன்றுதான் நாம்அடையவேண்டியது. சாதனை செய்தால் மாத்திரமே பெறமுடியும். அதுவும் அவள் அருளால், அவளை மாத்திரம் நினைந்துவேறொன்றையும் நினையாத நிலையே சாதனையின் முடிவாகும்.

பெற்றார் பெரும் பேறு பெற்றார்
பெற்றார் பிறவி தீரப்பெற்றார்
பெற்றார் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் தாயே தானானபேறும்பெற்றார்.

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

## பண்டரிநாதர் வரலாறு

மகாராஷ்டிர ராஜ்யத்திலே சந்திரபாகா என்ற நதியோரத்திலே பண்டரிபுரமென்றும் ஜகந்நாதமென்றும் சிவாரணுவென்றும்பல பெயர்களால் விளங்கும் திவ்ய க்ஷேத்திரத்திலே ஸ்ரீ பகவான் கிருஷ்ணபரமாத்மா பண்டரிநாதன், விடோபா புண்டரீக வரதன் என்ற திவ்ய நாமங்களால் ஸ்தோத்தரிக்கப்பட்டு எழுந்தருளி ஜகத்தை இரக்ஷித்து வரும் செய்தியை யாவரும் அறிவர். அவ்வாறு அங்கே எழுந்தருளியதற்கு ஒரு காரணம் கூறுவார்கள். அது பின்வருமாறு:—

முன்னொரு காலத்தில் அந்த ஊரிலே புண்டரீக பக்தன் என்ற ஒருவன் இருந்தான். அவன் பல சாஸ்திரங்களில் வல்லமையடைந்து தன் பெற்றோர்களுடனும்மனைவியுடனும் வாழ்ந்துவந்தான். அவன் பல நூல்களைக் கற்றறிந்தும் விதிவசத்தால் மயக்கங்கொண்டு, தன் மனைவியிடம் அளவில்லா மோகங்கொண்டு, தன் பெற்றோர்களைக் கவனியாமலும் தனக்குரிய ஸத்கர்மாக்களில் ஈடுபடாமலும் நடந்துவந்தான். அவனுடைய மனைவி உயர்ந்த குணங்கள் பெற்றிருந்ததால் தன் கணவனை நல்வழிப்படுத்த எவ்வளவோ முயன்றும் பயனில்லாமற் போயிற்று.

இப்படியிருக்குங் காலத்தில் அவ்வூருக்கு ஒரு புராணிகர் வந்து காசிகாண்டம் என்னும் அருமையான நூலை வாசித்துக் கதைசொல்லத்தொடங்கினர். அவருடைய இனிமையான பிரவசனத்தைக் கேட்க அவ்வூரார் திரண்டு சென்று கொண்டிருந்தார்கள். புண்டரீக பக்தனின் மனைவிக்குத் தானும் போய்க் கதைகேட்கவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அவள் தன் கணவனிடம் தன் கருத்தை விண்ணப்பித்தாள். முதலில் அவன் இணங்கவில்லை. பிறகு அவளுடைய இடைவிடாத பிரார்த்தனையைத் தட்டமாட்டாமல் ஒப்புக்கொண்டான். அவ்விருவரும் அன்றுமுதல் தவறாமல் புராணங் கேட்கத் தொடங்கினர்கள்.

பௌராணிகர் மிக அழகாகக் கதை சொன்னார். பகீரதன் பரமேசுவரனைக் குறித்துக் கடுந்தவம் செய்து ஆகாய கங்கையைப் பூலோகத்திற்குக் கொண்டுவந்து தன் பாட்டன் மார்களின் சாபத்தை நீக்கிய வரலாற்றை அவர் விளக்கமாகக் கூறிக் கங்கையின் பெருமைகளையெல்லாம் மிக விஸ்தாரமாகக் கூறினார். வாரணாசியின் மேன்மையையும் கங்கா தீர்த்தத்தின் மகிமையையும் புண்டரீகபக்தன் கேட்டு, மனமுருகிப் பௌராணிகரைப் பணிந்து அவர் காசியாத்திரைக்குப்போகும் போது தன்னையும் அழைத்துச் செல்லவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவரும் ஒப்புக்கொண்டார்.

புண்டரீகபக்தன் வயதுமுதிர்ந்த தன் பெற்றோர்களையும் அழகிய தன் மனைவியையும் தன் பின்னோடு அழைத்துக் கொண்டு சென்றான். போகும் வழியில் அவர்கள் பலவிடங்களில் தங்கினார்கள். அப்பிரயாணம் முழுமையும் முதியவர்களான பெற்றோர்களே மூட்டைகளைச் சுமக்கவேண்டியபொறுப்பையும் சமையல் செய்யவேணடிய பொறுப்பும் ஏற்றுக் கொண்டார்கள். அதைப்பற்றிப் புண்டரீகபக்தன் சிறிதும் கவலைகொள்ளவில்லை. அவன்மனைவிஎவ்வளவு கூறியும் அவன் செவிசாய்க்கவில்லை. கொடிய வெயிலில் நடக்க முடியாமல் கிழவர்கள்தவிப்பார்கள். அப்பொழுதும் அவன் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. கடைசியாக அவர்கள்காசியை அடைந்தார்கள்.

அங்கே அசி என்ற இடத்தில் குக்குட மகரிஷி என்ற ஒரு மகான் வாசம்பண்ணி வருவதைக் கேட்டு அவரைத் தரிசனம் பண்ண விரும்பி அவ்வாச்சிரமத்துக்குப் புண்டரீக பக்தன் சென்றான். அங்கே, ஆச்சிரமத்தில் கங்கா, யமுனா, ஸரஸ்வதி, நர்மதை, கௌதமி என்ற ஐந்து தேவதைகளும் மகரிஷிக்காகச் சமையல் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய திவ்ய தேஜஸைக் கண்டு புண்டரீக பக்தன் அவர்களை அணுகி, 'அம்மையீர்! நீங்கள் யார்? குக்குடபகவான் எங்கே? நீங்கள் ஏன் இவ்வளவு வருத்தப்பட்டுச் சமைக்கிறீர்கள்! இடம் கொடுத்தால் நானும் என் மனைவியும் வந்து உங்களுக்குப் பணிவிடைசெய்வோம்' என்று கூறினான். அவர்கள் குக்குட மகரிஷி தம் மாதாபிதாக்களுக்குச் சிச்ருஷை செய்யப்



போயிருக்கிறார்கள். நாங்கள் எங்கள் பணியைச் செய்கிறோம். எங்களுக்கு உன்னுடைய உதவி வேண்டாம். 'போ' என்றார்கள். அதன்மேல் அவர்களுக்குள் பின்வரும்சம்பாஷணை நடந்தது.

*புண்டரீகபக்தன்:-* பிரம்மஞானிகளாகிய மகரிஷிக்கும் மாதாபிதா சிச்ருஷை வேண்டுமா?

*பஞ்சநதிகள்:-* மூடா! மாதாபிதா கைங்கரியத்தை விட மேலானது எது? 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பெரியோர்கள் கூறியது அறியாமையாலோ? மகரிஷிக்குப் பிரம ஞானம் உண்டானது அவருடைய மாத்ரு, பித்ரு பக்தியினாலேயே! மாதா பிதிருக்களின் விருப்பத்திற்காக ஸ்ரீ ராமன் தனக்குரிய நாட்டைவிட்டுக் காட்டுக்கேகினதை நீ கேட்டதில்லையோ? மகரிஷியின்பெருமைக்கெல்லாம் அவருடைய பெற்றோர் பக்தியே காரணம். தாய் தந்தையிடம் பக்தியில்லாதவன் எவ்வளவு கோடி புண்ணியம் பண்ணியும் நரகத்தையே அடைகிறான். நீ கங்கையில் ஸ்நாநம் பண்ணி உன்பாவங்களைப் போக்கிக்கொள்ளக் கருதுகிறாய். நீ உன் மாதாபிதாக்களுக்குச் செய்த துரோகத்தால் எங்கள் அருகில் வருவதற்கும் உனக்கு உரிமை இல்லை. நாங்களே பஞ்சநதிகள். உன் முகத்தைக்காண்பதே பாவம் என்று நாங்கள் கருதுகிறோம். போ. உன் தாய்தந்தையர்களைப் போற்று. அதுவே உன் கடமை. அதுவே உனக்குக்கங்காஸ்நாந பலனைத்தரும். அதுவே உனக்குப் பிரும்மஞானத்தைத் தரும்.

*(என்று இவ்வாறுசொல்லி அவ் ஐவரும் மறைந்து விட்டார்கள்.)*

புண்டரீக பக்தன் மனத்தில் ஒரு புதிய ஒளி தோன்றிற்று. தான் அதுவரையில் தவறாக நடந்து வந்து கங்கா ஸ்நாநத்துக்கு யோக்கியமற்றவனாக ஆனதை எண்ணி மனம் புண்ணடைந்தான். மாதாபிதாக்களுக்குப் பணிவிடை செய்வதே தன்

முதற்கடமை யென்று கொண்டான். அந்தக் கொள்கையுடனே தான் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று பெற்றோர்களின் திருவடிகளில்விழுந்து தான் இதுகாறும் நடந்துவந்ததற்கு மன்னிப்பு வேண்டினன். அப்பெரியோர்கள் எக்காலத்திலும் தம் மகனைக் கோபித்தவர்களே அல்லர். 'பெற்றமனம் பித்தல்லவா?' அவர்கள் தம் குமாரனுக்கு நல்லறிவு உண்டானதை எண்ணி மகிழ்ந்து அவனை ஆசீர் வதித்தார்கள். அன்றுமுதல் புண்டரீக பக்தன் தன் மனைவியுடன் பெற்றோருடைய சிச்ருஷையில் சிறிதும் வழுவாமல் நடந்து வந்தான்.

இவ்வாறு பல நாட்கள் கழிந்து தான் மாத்ரு பித்ரு பக்தியினால் தூய்மையடைந்ததை உணர்ந்து அவர்களுடன் கங்கைக்குச் சென்று விதிப்படி ஸ்நாநம் செய்து விசுவேசுவரரையும் தரிசித்தான். பிறகு அவன் பெற்றோர்களிடம் விடைபெற்றுக் குக்குட மகாமுனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அவரை வணங்கிப் போற்ற அவரும் அவன் பக்குவியாகவிருப்பதை உணர்ந்து மகாமந்திரத்தை உபதேசம் செய்தருளினர். அந்த மகிமையினால் அவனுக்குப் பிரமானந்தம் உண்டாயிற்று. பெறுதற்கரிய அப்பேற்றைப் பெற்றும் அவன் சிறிதும் இறுமாப்படையாமல் தன் பெற்றோர்களுடைய பணிவிடைகளைச் சிறிதும் தாழ்த்தாமல் நிறைவேற்றி வந்தான்.

பிறகு அவர்கள் மிகவும் மூத்துத் தள்ளாமை அடைந்ததைக்கண்டு அவர்களுடன் தன் ஊருக்குத் திரும்ப எண்ணி குருவினிடம் உத்தரவு பெற்று, காவடி கட்டிப் பெற்றோர்களைச் சுமந்து கொண்டு, அரிதில் வழிகளைக் கடந்து, பண்டரிபுரம் வந்து சேர்ந்தான். அங்கும் அவர்களைத் தினந்தோறும் நதிக்குச் சுமந்து சென்று ஸ்நானம்செய்வித்து அவர்களுக்கு உடை, உணவு, முதலியவற்றைத் தானே கொடுத்து மிகவும் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வந்தான்.

இப்படியிருக்கையில், ஒருநாள் புண்டரீக பக்தன் ஆற்றோரத்தில் தன் தாய் தந்தையருக்கு அன்று ஆகவேண்டிய ஸ்நாநாதிகளை முடிப்பித்து அவர்களைச் சுமந்துகொண்டு எழத்



தொடங்கையில் எல்லா இடங்களிலும் நீக்கமற விளங்கும் பரந்தாமனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் புண்டரீக பக்தன் கண்ணுக்கெதிரில் தோன்றி நின்றார். அவரைக்கண்டதும் பக்தன் ஆனந்தமடைந்து "சர்வலோகசரணியனே! எளியேனை வலிய வந்து ஆட்கொள்ளும் பான்மையை என்னவென்று சொல்வேன்! தங்கள் திருவடிகள் சேற்றில் பதிவதை நான் பார்ப்பதோ. இதோ, இச்செங்கல்லில் தாங்கள் நின்றருள்க. என் பெற்றோர்களை வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்து, அவர்களுக்கு உணவூட்டிவிட்டு ஓடிவந்து தங்களைப் பூஜிக்கிறேன்." என்று சொல்லி அருகிலிருந்த ஒரு செங்கல்லை எடுத்துப் பகவான் நிற்பதற்காக கொடுத்தான். பக்தர்களுக்கு எளியவரான அண்ணலும் மண்ணையும் விண்ணையும் தாவிய தம் திருவடிகள் இரண்டையும் ஒருசேரச் செங்கல்லின் மீது வைத்த வண்ணமே அவன் வருகையை எதிர்நோக்கி நின்றார்.

வீடு சென்ற பக்தன் தன் பெற்றோர்களுக்குஉணவுஊட்டி அவர்களை இளைப்பாறச் செய்து தான் ஆற்றங்கரையில் பகவானை நிறுத்தி வந்த செய்தியைச் சொல்லி அவரைப் பூசித்து வர விடைவேண்டினன். அவன் அவர்களை நோக்கி "எம் பெருமான் எனக்கு ஏதேனும் வரம் அளிக்க விரும்பினால் அவரை என்ன கேட்கலாம்" என்றும் அவர்களைக் கேட்டான். அச்சொற்களைக் கேட்ட பிதா மிகவும் மகிழ்ந்து "தனயனே! எவனும் தனக்கென்று ஒன்றைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுதல் தகாது. உலக நன்மைக்காகப் பொதுவரம் ஒன்று கேட்டுக்கொள்" என்று சொல்லி மகனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

புண்டரீக பக்தன் பகவானுடைய பூஜைக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு ஓடோடியும் வந்து அவர் திருவடிகளுக்கு திரிகரணங்களும் ஒருமைப்பட்ட பக்திகொண்டு பூஜித்தான். ஈசுவரன் அவனுடைய அன்பைமெச்சி அவனை நோக்கி "பக்த, நீ செய்துவரும் மாத்ரு பிதரு சிச்ருஷையை நேரில் கண்டு ஆனந்திக்கவே இங்கு வந்தேன். உன்னைக் கண்டு மிகவும் சந்தோஷித்தேன். நீ விரும்பும் வரம் ஒன்றைக் கொடுக்கச் சித்தனாயிருக்கிறேன். கேள்" என்றருளினர்.

அச் சொற்களைக் கேட்டுப் பக்தர் ''ஐய, தங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தைவிட மேலானதான ஒரு வரம் நான் கேட்பதற்கு உண்டோ? இப்பொழுது எனக்குத் தரிசனம் தந்தருளும் நிலையிலேயே சகலருக்கும் என்றும் தரிசனம் தந்து காத்து ரக்ஷிக்கவேண்டும்'' என்று கூறி. அந்நிலையிலேயே சமாதி நிஷ்டையில் கூடிவிட்டார்.

இவ்வாறு புண்டரிக பக்தருக்காகச் செங்கல்லின் மீது நின்றருளிப் பூரணகிருபையுடன் காட்சியளித்த எம்பெருமான் இன்று எல்லோரும் கண்டு கடைத்தேறும்படி அதே நிலையில் சிலரூபமாக நின்று அருளிவருகின்றார்.

இவ்வரலாறு இருபதாம் நூற்றாண்டில் வாழும் நமக்கு ஏதேனும் போதனையைச் செய்கிறதா என்பதை அவரவரும் தத்தம் உணர்ச்சியினால் அளந்தறிந்து கொள்ளவேண்டும். **'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'** என்பது மிக எளிய ஒரு வாக்கியமே. ஐந்தாறு பிராயப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் இதனைப் படிக்கிறார்கள். இதனில் அமைந்துள்ள அர்த்த புஷ்டிதான் என்ன! சக்திதான் என்ன! தத்துவந்தானென்ன! நம் வேதம் கூறுவதும் நம் கொன்றைவேந்தன் கூறுவதும் ஒன்றே. அண்டமும் பிண்டமும் ஒன்றே. இதுவே நம் நாகரிகத்தின்பண்பாடு. இப்பண்பாடாகிய கோபுரம் பல்லாயிரம் ஆண்டுகளாக நம் பெரியோர்களால் கட்டப்பட்டது. அதனை பாதுகாத்துச் சேதமுறாமல் நம் சந்ததியாருக்குக் கொடுப்பது நம் பொறுப்பு. இது நடந்தது மகாராஷ்டிர தேசத்தில். நம் தமிழ் நாட்டில் பண்டைய நூலாகிய ஆசாரக் கோவையில்,

***வைகறை யாமம் துயிலெழுந்து தாம்செய்யும்***
***நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்***
***தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே***
***முந்தையோர் கண்ட நெறி.***

(*ஆசாரக்கோவை*)

என்னும் பாடலைக் காண்கிறோம். என்னாட்டிலும் பெரியோர்கள் கருத்து ஒன்றே.

''சுபம்''

ஓம்

# சற்குருக் கண்ணி

—○—

*கல்லாலின் கீழமர்ந்து கற்றுணர்ந்த நால்வருக்கும்,*
*சொல்லாமல் சொன்ன சுகஞான சற்குருவே! 1*

*அழுமழலைச் சம்பந்தர்க் கம்மையப்ப னாகவந்து.*
*செழுஞானப் பாலூட்டிச் சென்றஅருட் சற்குருவே!*

*வாகீசர் தம்மை வருத்தி, மறக்கருணை*
*வேகத்தால் ஆட்கொண்ட விந்தைமிகு சற்குருவே!*

*தூய மணக்கோலச் சுந்தரர்முன் வந்தடிமைச்*
*சாசனத்தைக் காட்டித் தடுத்தாண்ட சற்குருவே!*

*வாதவூர் அண்ணலுக்கு வண்ணக் குருந்தடிக்கீழ்,*
*போதவிழி காட்டிப் புகலளித்த சற்குருவே! 5*

*காதற்ற ஊசிதனைக் காட்டி,உடன் பட்டினத்தார்*
*போதத் துறவுகொளப் போதித்த சற்குருவே!*

*சந்தத் தமிழ்வளர்த்த தந்தை அருணகிரிக்(கு)*
*அந்தமிலா இன்பம் அருளியவான் சற்குருவே!*

*அருள்மிக்க நற்தாயு மானவர்க்குச் சித்திதர,*
*திருமூலர் தம்மரபில் தேடிவந்த சற்குருவே!*

*உள்ளுருகிக் காதலித்த ஒப்பற்ற ராமலிங்க*
*வள்ளலுக்குத் தில்லையிலே வாய்த்தசிவ சற்குருவே*

*அகிலத் திருள்வலிமை யாவும், நொடிப்பொழுதில்*
*அகலப்பே ரன்பர்க் கருள்காட்டும் சற்குருவே! 10*

*வாழும் வகையறிந்து வாழ்ந்திட, நல் அன்பர்தமை*
*ஆளும் கருணை அரசே, என் சற்குருவே!*

*ஐம்புலச் சேற்றில் அழுந்திக் கிடந்திடும், இப்*
*புன்பாவிக் குன்பாதப் போதமுண்டோ சற்குருவே?*

*காதலித்து நெஞ்சைக் கரைக்காத பாவியெனக்(கு)*
*ஓதரிய ஞானம் உணர்த்துவையோ சற்குருவே?*

*பற்றில் உழலும் பதிதன், படுபாவி,*
*கற்றறியா மூடன் எனைக் காவாயோ சற்குருவே?*

ஈனக் கருக்குழியில் ஏங்கித் தவித்துழலும்
தீனன் எனக்கும்அருள் செய்வாயோ சற்குருவே? 15
ஊனக்கண் காட்சி ஒழித்துப் பரமுணரும்
ஞானக்கண் காட்சி நலந்தருவாய் சற்குருவே! 16
பேதையெனை வாட்டும் பெரும்பாசப் பேயோட்டி,
நாதனைநே சித்திருக்கும் நாட்டமருள் சற்குருவே! 17
என்னுள் மறைந்தொளிரும் இன்பப் பரஞ்சுடரை,
உன்னி, உன்னி உள்ளத் துணரவருள் சற்குருவே! 18
சார்பிலாப் பூங்கொடிபோல் தத்தளிக்கும்-
பேதையினேன்,
சார்ந்து நலந்தழைக்கத் தாள்துணைதா சற்குருவே!
பிறவிக் கடல்கடக்கும் பெற்றியின்றித் தத்தளிக்கும்
சிறிய துரும்பெனக்குன் சேவடிதா சற்குருவே! 20
ஆணவச் சேற்றில் அழுந்திக் கிடக்குமெனை,
ஞானக் கரத்தால் நனியெடுப்பாய் சற்குருவே! 21
உண்மைவழி காணு துலகிருளில் தத்தளிக்கும்
புன்மையினேன் உய்ய,ஒளிப் போதமருள் சற்குருவே!
நேசர் இருவகையில், நித்தமுனக் காயுருகும்
ஈசநே சர்களிடை என்னையும்ஆள் சற்குருவே! 23
இன்பத் திருவருளை, எண்ணி, எண்ணி என்னிதயம்
துன்பற் றிருக்கவருள் சுத்தசிவ சற்குருவே! 24
கங்குற் கமலம்போல், கண்மூடி உட்குவிந்து,
பொங்கும் அருட்சுடரைப் போற்றவருள் சற்குருவே!
சிவமணக்கும் ஞானச் செழுந்தேன் பதம்பெற,மெய்த்
தவமிருக்கும் அன்பரடி சாரவருள் சற்குருவே! 26
எவ்விதத்துன் பத்தினிலும் இன்பநிலை பெற்றிருக்கச்
செவ்விக் கருணைத் திருவருள்தா சற்குருவே! 27
தித்திக்கும் பேரின்பச் செந்தேன் கடல்திளைக்க,
பக்திமின் சாரம், என்னுள் பாய்ச்சியருள் சற்குருவே!
துள்ளித் திரியும் துடுக்கு மனமடக்கித்
தெள்ளமைதித் தியானம் செழிக்கவருள் சற்குருவே!
மோனக் கடலில் முழுகித் திளைத்திருக்கும்
ஆனந்த போதம் அருள்வாய், என் சற்குருவே! 30

(பரமஹம்ஸ தாசன்)

# ஆண்டவனின் அதிசய அரண்மனை!

(சுவாமி சிவானந்தர்)

கருங்கல், செங்கல், சுண்ணும்பு, சிமெண்டு, முதலிய பொருட்களால் ஒருகொத்தன் வீட்டைக்கட்டுகிருன். முக்கியமான சுவர்களில் பெருங்கற்களைவைத்து, அவற்றின் இடுக்குகளில் செங்கல்லையும் சரலையும்புகுத்தி, அதன்மேல் சுண்ணும்பைப்பூசி, அதற்கும்மேலாக சிமென்டை அப்புகிருன். கடைசியில் சுவரை நன்கு பளபளப்பாக்கிக் கண்களைக் கவரும்படியான வர்ணத்தைப் பூசிவிடுகிருன்! இதேமாதிரி தெய்வீகக் கொத்தனை ஈசுவரன் மனித சரீரத்தைப் பிரகிருதியின் துணை கொண்டு கட்டியிருக்கிருன். எலும்புகள் பெருங்கற் துண்டுகளையும், வெள்ளைத்தோல் சுண்ணும்பையும், மேல்தோல் சிமென்டையும், தோலின்மீதுள்ள நிறம் வர்ணப்பசையையுங் குறிக்கின்றன! என்ஜினியர்கட்கெல்லாம் தலைசிறந்த என்ஜினியரான தெய்வீக என்ஜினியரின் அதிபற்புதத் திறமையைப் பார்த்தீர்களா?! தசைகள் எலும்புகளோடு தசைநார்களால் ஒட்டவைக்கப்பட்டுள்ளன.

மூட்டுக்கள் பந்தகனிளால் நன்கு கட்டப்பட்டுள்ளன. கொழுப்பின் பெயர்ச்சி கைகால்கள், மார்பு, முதுகு அடிவயிறு முதலியவற்றிற்கு நல்ல தோற்றத்தைக்கொடுத்து அழகுபடுத்துகிறது. தோலிலுள்ள வர்ணப்பசை பார்ப்பவர்களின் கண்களைக் கவர்ந்து செல்கிறது. மக்கள் அழியும் சரீரத்தின் பொய்யழகைக்கண்டு மயங்கி நிற்கின்றனர்! அவர்கள் இந்தச் சரீரத்தோடு ஒட்டிக் கொள்கின்றனர்; இங்ஙனம் ஒட்டிக் கொள்வதின் நிமித்தம் பிறவிக்கடலில் விழுந்து பரிதவிக்கின்றனர்!

சரீரம் அதிசயமானதோர் நகரும் அரண்மனை. மேன்மை தங்கிய பிரம்மன் அதில் வாசம் செய்கிருர். பிரம்மன்தான் அழியா ஆத்மா. புத்தியே அவரது பிரதம மந்திரி. மனம் அவரது படைத்தலைவன். பத்து இந்திரியங்களும் போர்வீரர்கள்,

அல்லது பணியாட்கள். கண்கள் இவ்வரண்மனையின் விசித்திர யன்னல்கள். வெளியே செல்வதற்கான வழிதான வாய். கண்களும் செவிகளும் உள்ளே செல்லும் வழிகள். மெய், வாய், கண் மூக்குச் செவியெனும் பஞ்சேந்திரியங்களுக்குரிய அதிதேவதைகள்தான் வாயிற் காப்போர்.

நரம்புகளே கம்பிகள். மூளைதான் ஆதாரம். அது எல்லாச் செய்திகளையும் பெறுகிறது. அதில் ஒரு அதிசய **“சுவிச் போர்டும்”** இருக்கிறது. பிராணன் மின்சாரம். எலும்புகள் மலைகள். சிரைகளே நதிகள். சிறுநீர்ப்பை சமுத்திரம். சிறுநீர்க்குழாயும் மலக்குழாயும் சாக்கடைகள். இதயம் நீர் செலுத்தும் அலுவலகம். தமனிகள் குழாய்கள். சூட்சும இதயமே பிருந்தாவனத்தோட்டம். சுக்ஷும்னாதான் பிருந்தாவனிலுள்ள **‘‘குஞ்சுகல்லி.’’** பிரம்மன் அல்லது பகவான் கண்ணனோடு ஒன்றாகச்சேர விரும்பும் ராதையே ஜீவன். ஜீவனும் பிரம்மனும் சேருமிடமே சகஸ்ராரம், அல்லது உச்சி. பல்வேறு சக்கரங்கள்தான் ஓய்வுக்குரிய இடங்கள்.

சரீரம் ஐந்து மூலப் பொருள்களால் ஆகியது. எலும்பு மண்ணன்றி மற்றில்லை. இரத்தம் தண்ணீரன்றி வேறில்லை. தோலும்கண்களிலுள்ள பளபளப்புத்தான் அக்கினி. மூக்குத்துவாரத்திலும் மூச்சுப்பைகளிலும் சென்றுவரும் பிராணன் காற்றின்றிப் பிறிதொன்றில்லை. இந்தக்காற்று ஆகாயத்தில் தங்கி நிற்கிறது. ஆகாயமேமற்ற நான்கு தத்துவங்கட்கும் ஆதாரம்; காற்று, நெருப்பு, நீர், மண் நான்கும் ஆகாயத்தினின்றும் தோன்றியவை. சரீரம் புதைக்கப்பட்டால் எலும்புகள் மண்ணோடு ஒன்றாகிவிடுகின்றன. அவைகள் வந்த இடத்தில் சென்று சேருகின்றன. லயசிந்தனையை அப்பியாசம் செய்வதன் மூலமாக மண்ணை நீராகவும், நீரைத் தீபாகவும், தீயைக் காற்றாகவும், காற்றை ஆகாயமாகவும் குறைத்தீர்களேயானால் உடல் உண்மையாகவே நிலைத்து நிற்க முடியாது. அது ஒன்றுமில்லாத சூனியத்தில் மறைந்து விடும். மாயையின் ஜாலவித்தையால் நீங்கள் இந்தச் சரீரத்தைக் காண்கிறீர்கள். உண்மையில் சரீரத்தினுடையவும் மனத்தினுடையவும் ஆதாரமாக விளங்கும் அழியாத ஆத்மாதான் மெய்யானநிலைபொருள்.



சரீரம் அசேதனமும் உணர்ச்சியற்றதுமாக இருக்கிறது. எப்படி இரும்பு உருண்டையானது. தீயுடன் தொடர்புகொண்டுநிற்கும் வரையிலும் தீப்பந்தாகத் தோன்றுகிறதோ, அதேபோல் பிராணன், மனம், சைதன்யம் இவை பிரிந்தபின் சரீரம் மரக்கட்டையாகித் தங்கிவிடுகிறது. சூட்சுமத்தன்மை வாய்ந்த சைதன்யம் முதலில் மந்தமான புத்திக்கும், அதன் மூலம் மந்தமான சரீரத்திற்கும் மின்தாதுவை ஏற்றுகிறது. இம்முறையே சரீரம் அசைந்து, உணர்ந்து பல்வேறு செயல்களைச் செய்கிறது. எங்ஙனம் தோன்றினாலும், மனிதச் சதை களிமண். எலும்பு மண்ணின் ஒரு மறு தோற்றமே. ஓ! மனிதர்களே! சதையும் எலும்பும் சேர்ந்த இந்தச் சரீரத்துடன் ஒட்டிக்கொள்ளாதீர்கள். சரீரத்தின் மீதுள்ள மோகத்தை விட்டொழியுங்கள். அறியாமையை விரட்டியடியுங்கள். அழிவில்லாத ஆத்மனைச் சேர்ந்து விடுதலையை அடையுங்கள்.

இவ்வதிசய அரண்மனையின் உள்ளறைகளில் ஆண்டவன் ஒளிந்து கொண்டிருக்கிறார். அவர் உங்களுடன் **“கண்ணாமூச்சி”** விளையாடுகிறார். அவரைத் தேடிக் கண்டுபிடியுங்கள். புறப்பொருள்களிலிருந்து மனதையும் இந்திரியங்களையும் பின்னிழுத்து ஒன்றித்தல், தியானம் மூலமாகக் கடவுளை இதய குகையினுள் தேடிக்கண்டு பிடியுங்கள்.

---

## பொன் மொழிகள்

—※—

*மனமாகிய குரங்கு செய்வதையெல்லாம் நாம் எழுதிக்கொண்டு போனால் காலக்கிரமத்தில் அதை வசப்படுத்தி விடலாம். ஒன்றை அடக்குமுன்பாக அதன் இயல்புகளையெல்லாம் நாம் அறிந்துகொள்ளவேண்டும். நம்மால் நன்றாக அறியப்படாததை நாம் வசப்படுத்த முடியாது.*

# ஸ்ரீ லலிதா பஞ்சரத்தினம்

(சங்கரர்)

லலிதா தேவியின் திருமுகமாகிய தாமரை, கோவைப்பழம்போன்று சிவந்த உதடுகளையுடையதாயும், பெருத்த முத்து மூக்குத்தியினாலே பிரகாசிக்கின்ற மூக்கோடு விளங்குவதாயும், காதுகளின்வரையிலே நீண்ட கண்களையுடையதாயும், செம்மணிகள் குயிற்றிய குண்டலங்களை இரு காதுகளிலுடையதாயும், புன்சிரிப்பையுடையதாயும், மான்மதம் என்னும் கஸ்தூரியாலே பொட்டிடப்பெற்று ஒளிருகின்ற நெற்றிப்புறத்தையுடையதாயும், விளங்குகின்றது. தேவியின் இத்தகைய திருவுருவை அதிகாலையில் எழுந்ததும் தியானிக்கின்றேன்.

வெள்ளைக் கரும்பாகியவில், பஞ்சபாணங்களாய மைந்தபூக்கள், பாசக்கயிறு இவற்றை ஏந்திநிற்பதாயும், கருமாணிக்கக் கற்கள் பதித்த பொன்னாலான கைவளையல்களாலும், தோள்வளையல்களாலும் ஒளிபெற்று விளங்குவதாயும், செம்பொன் மோதிரங்கள் ஒளிர்கின்ற விரல்களாகிய செந்தளிர்களாற் செழுப்புற்றதாயுமுள்ள நான்கு கிளைகளையுடையதான லலிதாதேவியென்னும் கற்பகக் கொடியை அதிகாலையிலே சென்றடைந்து சரண்புகுகின்றேன்.

பக்தர்களுக்கு விரும்பியவற்றையெல்லாம் கொடுப்பதிலேயேஎப்பொழுதும் இன்புறுவதும் சம்சாரமாகின்ற சாகரத்தைக்கடந்து அக்கரையேறுவதற்குஉதவுகின்ற புணையாகஅமைவதும் திருமாலின் உந்தித் தாமரையிலேதோன்றி அத்தாமரையிலேயே நித்திய வாசஞ்செய்யும் பிரம்மதேவன் முதலான தெய்வத்தலைவர்களாலே பூஜித்து முக்திபெறற்குரியதும் தாமரை, கொடி, சக்கரம் ஆகியவற்றை இரேகை வடிவிலே கொண்டு விளங்குவதுமான ஸ்ரீ லலிதாதேவியின் திருவடித்தாமரையை அதிகாலையிலே வணங்குகிறேன்.



மனத்தாலே உணர்ந்து வாக்காலே துதித்துச் சென்று சேர்வதற்குப் புறப்பட்ட வேதங்கள், எவ்வளவு முயன்றும் மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத அதிதூரத்திலே தேவி இருப்பதைக்கண்டு, அவளை அறியலாகாது என்றுமாத்திரம் அறிந்து தங்கள் முயற்சியினின்றும் மீளச் செய்தவளாதலின், வேத வாக்கிற்கும் வேதபுருஷனின் மனதிற்கும் எட்டாதவள் என்று பெயர்பெற்று விளங்குகின்றவளும், ஆனாலும் அந்த மூன்றுவேதங்களின் தலைசிறந்த பாகங்களான உபநிஷத்துக்களாலேயே ஒருவாறு விளங்கக்கூடிய பெருமைகளையுடையவளும் என்றுமுள்ள பரம்பொருளாதலால் பவதேவர் என்று சொல்லப்படுகின்ற பரமேசுவரனுடைய பத்தினியாய் விளங்குபவளும், சரம், அசரம் ஆகிய எல்லாப் பொருளையும் சிருஷ்டித்தளாகியும், மீண்டும் யுகமுடிவிலே அவற்றை அப் பரம்பொருளிலே லயிக்கும்படி செய்யக்கூடியவளாயும், இடைக்காலத்திலே அவையெல்லாம் நிலைபெற்றிருப்பதற்குக்காரணமாயும் இருப்பவளும், பரம கருணைக்கு எல்லா உயிர்களையும் பாத்திரமாக்கி அவர்களுக்கெல்லாம் நிலைபெற்றிருக்குஞ் சக்தியையும், பரம்பொருளைப் போற்றி நற்கதி பெறுவதற்கான பக்தியையும் பரம்பொருளோடு ஒன்றிப் பேரின்பமெய்துவதற்கான மார்க்கங்களையும் ஞானத்தையும் அளித்துக் குற்றமொன்றுமில்லாதவளாக விளங்குபவளும் பரப்பிரமத்தை அறிந்து அதோடு ஒன்றுவதற்கான வித்தைகள் பலவற்றை உபநிஷத்துக்களாலேஅளித்து பிரம்மவித்தி ஸ்வரூபிணியாய் விளங்குபவளுமான, சர்வமங்களை என்று பெயர்பெற்று பரமசிவ ஸ்வரூபிணியாய் விளங்கும் லலிதாதேவி'யை அதிகாலையில் எழுந்து போற்றுகிறேன்.

இவ்வாறு முக்கரணங்களாலும் உன்னை வழிபட்டதும் என்முன் உன் கருணாமூர்த்தத்தைக்காட்டியருளுகின்ற ஸ்ரீ லலிதாதேவியே! விடியற்காலத்திலே,

எங்களுடைய நற்காமங்களையெல்லாம் அளிப்பதற்கும் தீயகாமங்களையெல்லாம் மறுப்பதற்கும் எல்லாக் காமங்களுக்கும் ஈசுவரியாகவும், சரசுவதிதேவிக்கும் இலட்சுமிதேவிக்கும் ஈசுவரியாகவும் விளங்குமவளே என்றும், பரமேசுவரருக்குப் பத்தினியாக விளங்குபவளே என்றும், சர்வமங்களப் பொருளாக விளங்குபவளே என்றும், லோகமாதா என்றும் பெயர்பெற்ற ஸ்ரீ தேவியாக விளங்கும் பரம்பொருளே என்றும் சரசுவதிதேவியாக விளங்குபவளே என்றும் முப்புரங்களை எரித்த முக்கண்ணருக்குரிய தேவியே என்றும் எனது மொழிகளால் என்னுடைய வாய்க்கும் தூய்மை அளிக்கின்ற பெயரையே சொல்லிக் கொண்டிருக்கின்றேன்.

எவனொருவன் சகல சௌபாக்கியங்களையும் அளிப்பதும் மிகவும் அழகிய இளஞ்சொற்களைக் கொண்டு அழகு பெற்றுள்ளதுமான லலிதாதேவியாகிய ஸ்ரீ மாதாவின் ஐந்து சுலோகங்களின் கோவையை விடியற்காலத்திலே முழுமனம் செலுத்திப் பொருளுணர்ந்து பாட இயலாவிடினும் வெறும்வாய்ச் சொல்லாகச் சொல்லுகிறானோ அவனுக்கும் ஸ்ரீ லலிதாதேவியானவள் உடனே புன்முறுவலோடு காட்சியளிப்பவளாய் நல்லறிவையும், செல்வத்தையும் துன்பம் ஒரு சிறிதும் கலவாத இன்பத்தையும் உலகமுள்ளமட்டும் அழியாது நிலைபெறுவதற்கான நீண்ட புகழையும் தருகிறாள்.

தேவியே நீயே குரு; நீயே பரமசிவனும்; நீயே சிவசக்தியும்; நீயே தாயும்; தந்தையும் ஆகின்றாய். தத்துவத்தை அறிவிக்கும் வித்தையும் ஆகின்றாய். நல்ல சுற்றமும் நீயே, நீயே எல்லாமும் ஆகின்றாய்.

—*—

# அன்பு.

ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்
நேசத்தால் நினைந்து கொள்.

...ஔவையார்...

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்திலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

...திருமூலர்...

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு
அறத்திற்கே அன்புசார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

...வள்ளுவர்...

மெழுகுவர்த்தி தன்னையே உண்டு பிறர்க்கு ஒளி தருகின்றது. இதயத்தில் அன்புடையோர் நீடு வாழ்வார்.

...ஷின்டோமதம்...

அன்பு செய்யும் இதயம் எப்பொழுதும் இளமையுடையது. அன்புடன் விருந்தை உபசரிப்பவன் இறைவனுக்கே விருந்து செய்பவன். விருந்தோம்பல் கடவுள் வழிபாட்டின் அம்சமேயாகும். நான் சொல்வதைக் கேள். அன்பான செயல்களே அனைத்து அறம்.

இகழ்பவனிடம் அன்பு செய், உனக்கு அறிவு கூடும். புகழ்பவனிடம் அன்பு செய்யாதே, உன்னுடைய அறிவு குறையாது. அடுத்தவனிடம் அன்பு செய்பவன் ஆண்டவன் ஆணையை நிறைவேற்றுபவன். உன்சகோதரனை வெறுக்காதே. அவன் தவறு செய்தால் பழிவாங்காதே. உன்னைப்போலவே அவனையும் நேசிப்பாய்.

...எபிரேயமதம்...

நல்லவனோ தீயவனோ யாரிடத்தும் அன்பாயிரு. தீயவழியினின்று விலக்குவதே தீயவனுக்குச் செய்யும் அன்பாகும். தனக்குச் சகல துணைவலியும் பொருள் வலியும் இருந்தும் தனக்குத் தீமை புரிந்தவரைப் பொறுத்துக் கொள்ளுகிற உயர்குணமுடையவர்கள் நம் நாயகனிடம் நலம் பெறுவார்கள். கடினமான இதயத்தை உடையவன் கடவுளிடமிருந்து நீண்டதூரம் அகன்றவனாவான்.

...இஸ்லாமியமதம்...

அன்புதான் தலைசிறந்த கொடை, அதுவே உயிரைக்காப்பதாம். கடவுளை அஞ்சி நடக்கும் சான்றோர் மனத்திலேயே அன்பு காணப்படும். அன்பில்லாத உடலைச் சுடுகாடு என்றே கொள்க.

உலகசுகத்தில் இச்சையுள்ளவரையில் இறைவனிடம் அன்பு உண்டாகமாட்டாது. அன்பினால் விளைவது நன்மையா தீமையா என்று ஆராய்வோர் அன்புசெய்ய அறியாதவர். உன்னைப்பிறர் எவ்வாறு நடத்தவேண்டும் என்று விரும்புகிறாயோ அவ்வாறே நீ பிறரையும் எண்ணு. அதுவே உனக்குப் பேரின்பத்தில் பங்குதரும். மக்களுக்குச் சேவை செய்வதே கடவுளுக்குச் சேவை செய்வதாகும். சேவை மூலம்தான் அன்பு பயன் தரும்.

அன்புசெய்பவரே வாழ்பவர். மற்றவர் அனைவரும்வாழாதவரே. அன்புசெய், யமபாசத்தைஅறுத்து விடலாம். பொறுமையினும் உயர்ந்த தவமில்லை. திருப்தியிலும் உயர்ந்த இன்பமில்லை. அவாவினும் பெரிய தீமையில்லை. கருணையினும் பெரிய அறமில்லை. மன்னித்தலினும் மிக்க ஆயுதமில்லை. மரம் தனக்காகப் பழுப்பதில்லை. ஆறு தனக்காக ஓடுவதில்லை. சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

...சீக்கியமதம்...



அணுக்களிடையே "இணைக்கும்சக்தி" இருப்பதினாலேயே உலகம் பொடியாக உதிர்ந்துவிடாமல் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அதுபோலவே உயிருள்ளவையினிடையிலும் அன்பு என்னும் இணைக்கும் சக்தி இருக்கவேண்டும். அன்பு உள்ள இடத்திலேயே உயிர் இருக்கின்றது; பகைமை அழிவையே தருகின்றது.

அழிவுச்சக்தி உள்ள இந்த உலகத்தில் ஆக்கச் சக்தியும் இருப்பதால் அழிவு தர்மத்தைவிட உயர்ந்தான ஒரு தர்மம் இருக்கவேண்டும். அந்தத் தர்மத்தை அனுஷ்டிக்கும் சமுகத்தில் வாழ்வதே வாழ்வாகும். ஆதலால் யாரேனும் எதிர்த்தால் அவரை அன்பால் வெல்லவேண்டும்.

மனிதஜாதி அழியாமல் ஜீவித்துக்கொண்டிருப்பதால் "இணைக்கும் சக்தியே" "பிரிக்கும்சக்தி"யைவிடப் பெரியது என்று விளங்குகிறது. மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள அடிப்படையான வித்தியாசம் அன்பு முறையை நாளுக்குநாள் அதிகமாக அறிவதும் அனுஷ்டிப்பதுமேயாகும். அநேக சமயங்களில் மிருகசக்தியே வெற்றி கண்டு விடுகிறது என்பது உண்மையே. அதனால் அன்புமுறை தவறு என்று ஏற்பட்டுவிடாது. அனுஷ்டிக்கக் கஷ்டம் என்பது மட்டுமே ஏற்படும். உயர்ந்த முறை கஷ்டமாகத் தானே இருக்கும்?

...காந்தி...

## பொன்மொழிகள்

அகவாழ்க்கையின் அமைதியிலே புறவாழ்க்கையின் அழகு பிறக்கின்றது. உருவில்லாத பொருள்களினிடமிருந்தே உருவுடையன உண்டாகின்றன. ஆதலின் அகவாழ்க்கை ஒன்றிலேயே கருத்தாயிரு.

# நான் போனால் போகலாம்

(சுவாமி நிர்மலானந்தா சிவானந்தாச்சிரமம் - ரிஷிகேஷம்)

நம் பாரத தேசத்தில் வாழ்ந்த பலமகான்கள்என்ன சொன்னார்கள்? "நான் சாகு முன்பு நான் சாகவேண்டும்" என்று சொன்னார்கள். இதனை மறைபொருளாய் உபதேசித்தார்கள். சமீபத்தில் அருணையில் ஜோதியில் கலந்த மகான் ரமணமகரிஷிகள் நான் யார்? என்பதை விசாரியுங்கள் எனஉபதேசித்தார்கள்

இன்று இமயஜோதி சுவாமி சிவானந்தர் நான் யார்? என்பதைச் சிந்திக்கவே, இடைவிடாது மக்களை ஊக்குகின்றார். ஆனால் நாம் அதை உணருகிறோமா? அதுதான் இல்லை. ஏன்? இந்த உடல்மேல்கொண்ட மோகமே. இறைவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பைத் துண்டிப்பது 'நான்' என்னும் அகங்காரமே. நான் பணக்காரன், நான் படித்தவன், நான் உயர்ந்த ஜாதிக்காரன் இப்படியே தான் இன்றைய மனித சமுதாயம் பறைசாற்றி தான் சச்சிதானந்த ஆத்மா என்பதை மறந்து சாந்திதேடி அலைகின்றது. "நான்போனால் போகலாம்" என்பதை விளக்கவே இச்சிறுகதை வருகின்றது. தென்னிந்தியாவில் காவேரிநதிக்கரையில் ஒரு பிரம்மஞானி ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். அவ்வாச்சிரமத்தில் பல படித்த செருக்குள்ள சாதுக்களும் சில உயர் சாதி என்னும் பிராமணப் பிரமச்சாரிகளும் இருந்தார்கள். எல்லோரும் ஏதோ வட நூல்களைப் படித்து அதை மனப்பாடம் பண்ணியதால் தம்மைப் பெரிய ஜீவன் முக்தர்களாக மதித்திருந்தார்கள். மேலும் வீண் சாஸ்திரச்சண்டையே தினமும் நிகழ்ந்து வந்தது.

அப்படிப்பட்ட கூட்டத்தின் நடுவே கண்ணன் என்னும் தாழ்ந்த ஜாதிப் பக்தர் ஒருவர் இருந்தார். கல்வியறிவற்றவர். குருசேவையே தான் தனது பெரிய ஞான நூலாகக் கொண்டவர். குருவின் தரிசனம்



ஒன்றே தமது மேலான பாக்கியம் எனக் கருதியவர். சாஸ்திரச்சண்டைகள் நடக்கும்போதெல்லாம் கண்ணன் குருநாதரை மனதில் தியானித்து அநுபவித்துக்கொண்டிருப்பார்.

ஒருநாள் குருதேவர் முன்னிலையில் சீடர்கள் பலத்த சர்ச்சை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குருதேவர் ஆத்மபோதம் என்றால் என்ன? என்றொரு கேள்வியைக் கேட்டார். அவர்கள் அதற்குப் பொருள் சொல்லாது வேதாந்த நூலில் யாவும் உளது என்று கூறினார்கள். அச்சமயம் ஆச்சிரமத்தைக் கூட்டிச் சுத்தம் செய்துகொண்டுநின்ற கண்ணனை அழைத்து மேற்படி வினாவை வினவினார். பிரம்ம விசாரமுள்ள கண்ணனோ சாஸ்திர ரீதியாக விளக்கம் கொடுத்தான். இது மற்றச் சீடர்களுக்குப் பெரிதும் மனவருத்தத்தைக் கொடுத்தது. குருதேவர் கண்ணனைத் தமது சீடர்களுக்கு விளக்கிவைப்பதற்காக இன்னோர் வினாவையும் வினவினார். இக்கூட்டத்தில் யார் மோட்சம் அடையக்கூடியவர்கள் சொல்லு பார்க்கலாம் என்று வினவினார்? இக்கேள்விக்கு விடைகூறுவதற்கு இவனுக்கு என்ன தகுதி உண்டு என்று சீடர்கள் மனதுள் நினைந்தனர். கண்ணன் விடைகூறுவதே தம்மை அவமானப் படுத்துவதாக நினைந்தனர். கண்ணன் எழுந்தான். குருதேவருடைய கைத் தடியை எடுத்தான். ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வோர் அடிகொடுத்தான். அடி விழும்போதெல்லாம் ஒவ்வொருவரிடமிருந்தும் "உம்" என்றொரு முனகல் எழுந்தது. இவர்கள் ஒருவருமே மோட்சத்திற்குத் தகுதியற்றவர்கள் என்று கண்ணன் கூறிமுடித்தார். "நான் போக முடியுமா?" என்று கேட்டார் குருநாதர். நீங்களும் போக முடியாது என்றார்கண்ணன். அப்படியானால் யார் போகமுடியும்? "நான் போனால் போகக்கூடும்" என்றார் கண்ணன். சீடர்களுக்குத் தாங்கமுடியாத

கோபம். குருதேவர் மாத்திரம் இல்லாதொழிந்தால் இதுவரை கண்ணன் இருந்த இடமே இல்லாது செய்திருப்பார்கள்.

கண்ணா! நானும் போக முடியாது! இவர்களும் போக முடியாது! நீமாத்திரம் எவ்வாறு போகக் கூடும்? என்றார் குருநாதர். சுவாமி நானும் போக முடியாது. நான் என்ற அகங்காரம் செத்துப்போனால் யாரும் போகக் கூடும் என்றுதான் சொன்னேன் என விளக்கினார் கண்ணன். இப்போதுதான் கண்ணனுடைய உண்மை நிலையை அறிந்தனர் சீடர் கூட்டம். இதேபோன்று சிலர் நினைக்கின்றார்கள். சில சமய நூல்களை வாசித்துவிட்டதாலோ, அன்றி மனனம் செய்து விட்டதாலோ தாம் பெரிய அனுபூதிச் செல்வர்களாகி விட்டோம் என்று. அப்படியானால் இன்றுவரை எத்தனையோ வாசிகசாலைகள் மோட்சம் அடைந்திருக்க வேண்டுமே. ஒலிபெருக்கிக் கருவிகள் மோட்சம் அடைந்திருக்க வேண்டுமே. அதுதான் நடக்கவில்லை. ஒருவன் சமய உண்மைகளை வாழ்க்கையில் தனக்கு ஆக்கிக்கொள்ள வேண்டும். அப்போதான் அநுபூதி நிலை ஏற்படும்.

## பொன் மொழிகள்

பணத்தினால் உணவை மட்டுந்தான் பெறக்கூடும். பணம் எவனுக்கு அடிமையோ அவன்தான் வாஸ்தவமான மனிதன். பணத்தை எப்படி உபயோகிக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் மனிதர்கள் என்ற பெயருக்கு அருகரல்லர்.

# ஸ்ரீ சுவாமி சிவானந்தசரசுவதி
— அவர்களின் —
# 72ஆவது பிறந்த தினச் செய்தி.

## விழிமின்! எழுமின்! உங்களை அறிமின்!

—: | :—

ஒவ்வொருவர் இதயத்துள்ளும் தெய்விகத் தன்மைப் பொறி ஜொலித்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருவர் சிந்தையுள்ளும் முன்னேற்றத்திற் குரிய நம்பிக்கைக் கிரணம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு ஆத்மாவுள்ளும் சுத்த சாந்த மயத்தின் உச்சஸ்தானமாகிய வீட்டிற்கு, பரிபூரணத்திற்கு, அகண்ட விழிப்புநிலைக்கு, மாறிலா இன்ப நிலைக்கு எல்லாவற்றினதும் முழு மூலத்தலத்திற்கு மீண்டு செல்லும் அடக்க முடியா ஆசை அமைந்துள்ளது. இதுவே உங்களது முடிபான எல்லை, முடிவான குறிக்கோள். இதனை எய்துவதற்கே நீங்கள் இவ்வுலகத்தில் பிறந்திருக்கிறீர்கள்.

ஒவ்வொருவனும் தன் முடிவுக்குத்தானே உத்தரவாதி. உங்கள் எதிர்காலம் உங்கள் கையிலுளது. ஆன்மா தன்னாலே தானே உயர்வெய்துகிறது. உங்கள் முன்னே இருவளிகளுள. ஒன்று இன்பமார்க்கம். மற்றையது நன்மை நெறி.

இவ்வுலகிற் பிணிக்கப்பட விரும்புவோர் பிறப்பு இறப்பு, விருப்பு வெறுப்பு, இன்ப துன்பங்கட்குத் தம்மை ஆளாக்குவார் முந்திய நெறியை விரும்புவர். உலகப் பொருள்கள் நிலையற்றன. நிலையற்றதும் பூரணமற்றதுமான மூலத்திலிருந்து நிரந்தரமும், பூரணமும் ஆன முடிபை நாமெய்த முடியாது. ஆகவே உலகப் பொருள்கள் உங்களுக்கு உண்மையான நிரந்தரமான சாந்தியையும் இன்பத்தையும் தரமாட்டா.

உண்மை அறிவாளனே, பொய்மெய்ப் பாகுபாட்டை அறிந்தவனே, துன்பமும் மரணமும் சூழ்ந்துள்ள உலகியலிலிருந்து இம்மையிலும் மறுமையி

லும் உண்மை இன்ப அனுபவத்தையும், ஆனந்தத்தையும் நன்மை நெறி, ஒன்றே சூழவா உள்ளோருக்குத் தரவல்லதெனத் திடமாக அறிகிருன்.

எந்நெறியிற் சேறலால் ஒருவன் அமரத்துவத்தை அடைய முடியுமோ அந்நெறியாகிய நன்மை நெறி உலகினூடும் அதன் எல்லை கட்கப்பாலும் பரந்து கிடக்கின்றது. சனங்களின் நன்மைக்காக வாழ்ந்து இவ்வுலகியலின் பற்பல பண்பு களிலும் உதாரணங்களிலிருந்தும் கற்கக்கூடியவற்றைக்கற்று நன்மையெய்துவோரே இந் நன்மை நெறிக்கண் சென்று கொண்டிருக்கும் யாத்திரிகராவர். அவர் குறிக்கோள் சுய அநுபூதிநிலை யெய்தலே. அத்தகையோருக்கு இவ்வுலகு முடிந்த முடிபான ஒன்றன்று. அந்நெறிக்கண் செல்லுதற் கமைந்த ஒரு வழியேயாகும்.

சுய அநுபூதிக்கொள்கையானது இழிவானவையும் லௌகீகமானவையுமாகியவற்றைச் சுட்டுப்பொசுக்கும் ஒரு எரிச்சுடராகும். பூரணத்துவத்தை நோக்கிச் செல்லும் இப்பெரு நெறிக்குத் தேவையானவை லௌகீக இயல்புகளைத் துறத்தல், விருப்பு வெறுப்பு பாசாபந்தமாகிய பெருநீர்ச்சுழல்களை அடக்கி ஆளுதல், ஆணவத்தையும் சுயநலத்தையும் வெற்றிகொள்ளுதலாம்.

உண்மையாளனுயிரு. அகிம்சையைக் கைக்கொள். சுத்தமானவனுயிரு. நன்மையாளனுயிரு. நன்மையைச் செய். பொய் முடிவில் ஒருவருக்கு உதவி செய்யாது. உண்மையைக் கடைப்பிடித்தாலே உண்மையான மனச் சாந்திக்கு உகந்தது. இம்சை பழிவாங்கவே வழிகோலும். பரிசுத்த மின்மை அசுத்தமான அமைதியற்ற மன நிலையையே ஆக்கும். புலனடக்கமின்மை நோயையும் வறுமையையுமீயும். அளவில்லாச் சுயநலத்திலிருந்தே கேடுகள் முளைகொள்ளுகின்றன. ஆகவே உண்மை அகிம்சைச் சுத்த நெறியே உத்தம நெறியாகும்.

உன்னை அறி. உன்னைப்பகுத்துப்பார். உன்மனத்தின் எழுச்சிகளை உன்னுள் மறைந்திருக்கும் அவா ஆசைகளைப் பகுத்துப் பகுத்துப்பார். உன் வாழ்க்கையில் நேர்மையே உள்ளோசையாக, உன் குறிக்கோளாக இருக்கட்டும். நீ எப்போதும் நேர்மையைக் கடைப்பிடிப்பாயாக!

உன் தெய்வீகப் பண்பை அறிய ஆவல்கொள். உனது சாதனைகளைப் பலப்படுத்து. உன் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் பரிசுத்தமும் நன்மையும் வளர முயற்சி. இதயத்தையும் மனத்தையும் சுத்தமாக்கு. உன்னிடமுள்ள இளிவாக பண்புகளைப் பரிசுத்தமுள்ளனவாக்கு. உறுதியுடன் நில். ஆத்மீக வாழ்வில் நன்மைக் குகந்தனவும் விரும்பத் தக்கனவுமானவற்றை வளர்த்துக்கொள். மனத்தில் வெறுப்பு, கோபம், காமம், பொருமை ஆகியவற்றிலிருந்து விடுவித்து அன்பு, சாந்தம், பரிசுத்தம், பற்றற்ற தன்மையிற் பற்றுக்கொள்ளச்செய்.

நன்மைநெறியென்பது ஆத்மீகநெறியே. இதனை இடைவிடாது நினைவுகூர். உயர்ந்த சாதனையென்பது நல்லவனுயிருத்தலும் நன்மையைச் செய்தலுமேயாம் உன்னுள் உள்ளொளி உள்ளது.

விழி! எழு! மாயைத்திரையைக் கிழித்தெறி-
உன்னை அறிந்துகொள்.
உங்கள் யாவரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக!

எளிய வாழ்வு, உயர்ந்த நினைப்பு, பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு, ஆகிய நான்குமே ஒரு மனிதனுக்கு இம்மண்ணுலகத்திலேயே விண்ணுலக வாழ்வை அளிக்கவல்லன.

*Registered at the G. P. O. as a News Paper, M. L. 59/300*

## சந்தா நேயர்களுக்கு

அடுத்த மாதத்துடன் **ஜோதியின்** 10-ம் ஆண்டு நிறைவுறுகின்றது. 11 ம் ஆண்டுக்குரிய சந்தாப்பணம் இம்மாதத்திலிருந்தே ஏற்றுக்கொள்ளப்பெறும். **ஆத்மஜோதி** நேயர்கள் அனைவரும் தமது புத்தாண்டுச் சந்தாக்களையும் பழைய பாக்கிகளையும் (15-10-58) க்குள் அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ஒவ்வொரு சந்தா நேயருக்கும் தனித்தனி கடிதம் எழுதுவதில் வீண்சிரமமும் வீண்செலவும் உண்டு. அதை மனதிற்கொண்டு உரியகாலத்தில் நேயர்கள் அனைவரும் தத்தம் சந்தாவை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். **இந்தியாவிலுள்ள சந்தாநேயர்கள்**

இந்தியாவிலிருந்து நேராக இவ்விடம் பணம் அனுப்புவதில் சில தடைகள் இருப்பதால் அவர்கள் தமது சந்தாவைப் பின் வரும் விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ் விடமும் அறியத்தர வேண்டுகின்றோம்.

***இந்தியாநேயர்கள் பணம் அனுப்பவேண்டிய விலாசம்***

R, VEERASAMBU. Sambu Industries, SALEM 2.

மலாயா, தென் ஆபிரிக்காவிலுள்ள நேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல் பிரிட்டிஷ் போஸ்ரல் ஓடர்மூலமே அனுப்பி வைக்கலாம்.

**ஆத்மஜோதி நிலையம்** நாவலப்பிட்டி (சிலோன்)


## கலைச் செல்வி

கலைகள் பலவளர்க்கும் கன்னித்தமிழ்ச் செல்வி. சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், விமர்சனப்போட்டி, மாணவர்போட்டி வளரும்எழுத்தாளர்கள் பகுதி இன்னும்பல

சந்தாதாரர்கள், விற்பனையாளர்கள் உடனேஎழுதுக

கலைச்செல்வி, கந்தரோடை - சுன்னகம்.


Printed by N. Muthiah at the Sri Murugan Printers - Punduloya
and Published by N. Muthiah, Athmajothi Niliyam, Nawalapitiya
Hony. Editor K. Ramachandra, Athmajothi Niliyam, Nawalapitiya